# பத்தாம் வகுப்பு

# தமிழ்

## சிறப்பு கையேடு : 2025 – 26

<u>ஒரு மதிப்பெண் வினாக்கள்*(TAMIL)*</u>

*10*-ஆம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள், *GeoGebra* மென்பொருளின் உதவியோடு, ஒரு வினாவிற்கு சரியான விடையை தேர்வு செய்ய, அதிகபட்சம் மூன்று வாய்ப்புகள் வழங்கி, மாணவர்களின் கற்றல், கற்பித்தல் திறன் அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு : *Hi-Tech Lab*-ல் *QR Code* -ஐ *Scan* செய்து அல்லது *Link* -ஐ *click* செய்து மாணவர்கள் பயிற்சி செய்யும் விதமாக மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

| *TAMIL* | *TAMIL* |
|---|---|
| *QR* | |
| *LINK* | *https://www.geogebra.org/m/ezxpdqyz* |


*Dr. MURALI. B. J HM,*
*GHSS BARUR, KRISHNAGIRI.*

*KALIYAPPAN .N ,PG ASST*
*GHSS MORANAHALLI, KRISHNAGIRI*

# தமிழ் - வினாத்தாள் வடிவமைப்பு

| வினா எண் | பொருளடக்கம் | கொடுக்கப்படும் வினாக்கள் | எழுத வேண்டிய வினாக்கள் | மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1 - 15 | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | **15** | **15** | 15x1=15 |
| 16 - 21 | 2 மதிப்பெண் வினாக்கள் (செய்யுள்-3, உரைநடை-3) **21 - கட்டாய வினா** | **6** | **4** | 4 x 2 = 8 |
| 22 - 28 | 2 மதிப்பெண் வினாக்கள் (இலக்கணம், மொழிப்பயிற்சிகள், கலைச்சொற்கள்) | **7** | **5** | 5 x 2 = 10 |
| 29 - 31 | 3 மதிப்பெண் வினாக்கள் (உரைநடைச் சிறுவினா -2, உரைப்பத்தி வினா – 1 | **3** | **2** | 2 x 3 = 6 |
| 32 - 34 | 3 மதிப்பெண் வினாக்கள் (செய்யுள் சிறுவினா – 2, மனப்பாடப் பாடல்-1) 34 – கட்டாய வினா | **3** | **2** | 2 x 3 = 6 |
| 35 - 37 | 3 மதிப்பெண் வினாக்கள் (இலக்கணச் சிறுவினா -1, அணி-1, அலகிடுதல்-1) | **3** | **2** | 2 x 3 = 6 |
| 38 - 42 | 5 மதிப்பெண் வினாக்கள் (செய்யுள் நெடுவினா -1, கடிதம் -1 படம் உணர்த்தும் கருத்து -1 படிவம் - 1, வாழ்வியல் திறன்கள் அல்லது மொழிபெயர்ப்பு-1) | **5** | **5** | 5 x 5 = 25 |
| 43 - 45 | 8 மதிப்பெண் வினாக்கள் (உரைநடை / செய்யுள் - நெடுவினா, துணைப்பாடம் -1, கட்டுரை -1) | **3** | **3** | 3 x 8 = 24 |
| | **மொத்தம்** | **45** | **38** | **100** |

## மாணவர்கள் பயிற்சி பெற வேண்டிய பகுதிகள்

- ஒரு மதிப்பெண் வினாக்கள்
- விடைக்கேற்ற வினா அமைக்க
- திருக்குறள்
- மனப்பாடப் பாடல்
- கலைச் சொற்கள்
- உரைப்பத்தி வினா
- அணி

த அலகிடுதல்

த கடித அமைப்பு

த படம் உணர்த்தும் கருத்து

த படிவம்

த துணைப்பாடக் கதைகள்

த கட்டுரை அமைப்பு

# 10 - ஆம் வகுப்பு தமிழ்

## வினா விடைகள் (2025-2026)

### இயல்-1

மதிப்பீடு

பலவுள் தெரிக.:

1. காலக் கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் எது?

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது. ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது.

இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம். ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்.

2. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

அ) இலையும் சருகும். ஆ) தோகையும் சண்டும். இ) தாளும் ஓலையும். ஈ) சருகும் சண்டும்.

3. எந்தமிழ்நா - என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்-

அ) எந் + தமிழ் + நா. ஆ) எந்த + தமிழ் + நா. இ) எம் + தமிழ் + நா. ஈ) எந்தம் + தமிழ் + நா.

4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல்' இது – தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

அ) பாடிய ; கேட்டவர். ஆ) பாடல் ; பாடிய. இ) கேட்டவர் ; பாடிய. ஈ) பாடல் ; கேட்டவர்.

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது -

அ) குலைப்பெயர் வகை. ஆ) மணிப்பெயர் வகை. இ) கிளைப்பெயர் வகை. ஈ) இலைப்பெயர் வகை.

குறுவினா:

1. பலகை என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

- ✓ பல கை – தொடர்மொழி (பல கைகள்)
- ✓ பலகை – தனிமொழி
- ✓ எனவே பொதுமொழி

2. மன்னுஞ் சிலம்பே மணிமேகலை வடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! -இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக

விடை: சிலப்பதிகாரம், மணிமேகலை

3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப் பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல தாறு வாழைப் பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல வாழைப் பழங்கள் உள்ளன.

மேற் கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக் காட்டி, எஞ்சிய தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

விடை: சரியான தொடர்கள்:

- ✓ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன
- ✓ ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

பிழை : தொடர் 2. ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

காரணம் : **தாற்றின் பகுதிதான் சீப்பு** :

4. " கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!

உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"

தமிழ்

பாடல் அடிகளில் உள்ள மோனை, எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

மோனைச்சொற்கள்:

கொள்வோர், கொள்க; குரைப்போர், குரைக்க

எதுகைச் சொற்கள்:

கொள்வோர், உள்வாய்

5. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

விடை:

- ✓ மட்டை நெல்
- ✓ செந்நெல்
- ✓ வெண்ணெல்
- ✓ கார்நெல்
- ✓ சம்பா நெல்

சிறுவினா:

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

- ✓ அன்னை மொழி.
- ✓ நறுங்கனி.
- ✓ பாண்டியன் மகள்.
- ✓ திருக்குறளின் மாண்பு.
- ✓ சிறந்த நூல்களை உடைய மொழி.

2. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.

இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

விடை:

அ) நாற்று - நாற்று பார்த்தேன்.

ஆ) கன்று - கன்று நட்டேன்.

இ) பிள்ளை- பிள்ளை வளர்த்தேன்.

ஈ) வடலி – வடலியைப் பார்த்தேன்.

உ) பைங்கூழ் - பைங்கூழ் எடுத்தேன்.

3. அறிந்தது, அறியாதது, புரிந்தது. புரியாதது. தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம்.

இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற் பெயர்களாக மாற்றி எழுதுக.

விடை:

- ❖ அறிதல் - அறியாமை
- ❖ புரிதல் - புரியாமை
- ❖ தெரிதல் - தெரியாமை
- ❖ பிறத்தல் - பிறவாமை.

நெடுவினா

1. நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.

- ➢ குறிப்புச் சட்டகம்
- ➢ முன்னுரை
- ➢ நாட்டு வளம்
- ➢ சொல்வளம்
- ➢ முடிவுரை

முன்னுரை:

நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதைக் காண்போம்.

நாட்டுவளம்:

- ✓ தமிழ் மொழி மிகவும் பழமையானது.
- ✓ நாட்டின் வளமும், அங்கு பேசும் சொற்களின் வளமும் தொடர்புடையது.
- ✓ நாட்டு வளம் சொல்வளத்தை உருவாக்குகிறது.

சொல்வளத்திற்கான சில சான்றுகள்:

- ✓ தமிழில் இலையைக் குறிக்க பல சொற்கள் உள்ளன.
- ✓ ஆங்கிலத்தில் "Leaf" மட்டும் உள்ளது.
- ✓ விளை பொருட்களின் மிகுதி – சம்பா, மட்டை, கார், வரகு, சாமை, தினை
- ✓ பயிர்களின் பல பகுதிகள்.
- ✓ நெல்லின் பல வகைகள்.

முடிவுரை:

நாட்டு வளமும் சொல்வளமும்தொடர்புடையது என்பதைக் கண்டோம்.

2. காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னிலும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவை சரியென்றால் இயம்புவதென் தொழில்
இவை தவறாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக! ----- கண்ணதாசன்

திரண்ட கருத்து : பாடலைப் பத்தி வடிவில் எழுதுக.

மோனை நயம் : கவிஞன் - கருப்படு

எதுகை நயம் : கருப்படு - பொருளை - உருப்பட

இயைபு நயம் : தெய்வம் - செல்வம்

முரண்: ஆக்கல் x அழித்தல், சரி x தவறு

அணி நயம்: உருவக அணி

3.புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**புயலிலே ஒரு தோணி - ப.சிங்காரம்**

| வ.எண் | குறிப்புச் சட்டகம் |
|---|---|
| 1 | முன்னுரை |
| 2 | வருணனை |
| 3 | அடுக்குத்தொடர் |
| 4 | ஒலிக்குறிப்புச் சொற்கள் |
| 5 | தோணி படும்பாடு |
| 6 | முடிவுரை |

**1. முன்னுரை :**

புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டைப் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் காண்போம்.

**2. வருணனை:**

- மேகப்பொதிகள் திரண்டன.
- மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- வானம் பிளந்து தீ கக்கியது.
- வானம் உடைந்து வெள்ளம் கொட்டியது.

**3. அடுக்குத் தொடர்**

- நொறு நொறு
- நடு நடுங்கி
- குதி குதித்து
- கிறு கிறுத்து
- கரை! கரை! கரை!

**4. ஒலிக்குறிப்புச் சொற்கள்**

- கும்மிருட்டு
- குருட்டிருட்டு
- கடலை அடிக்கிறது
- முனகல்
- இடி முழக்கம்

**5. தோணி படும்பாடு**

- இத்தகைய வருணனையும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலிலே தோணி படும்பாட்டை அழகாய் விவரிக்கின்றன.

**6. முடிவுரை**

புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டைப் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகவும், தெளிவாகவும் கண்டோம்.

<u>மொழிப் பயிற்சிகள்:</u>

1. தேன், நூல், பை, மலர், வா

இத்தனி மொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர் மொழிகளாக்குக.

1. தேன் - தேன் எடு
2. நூல் - நூல் படி
3. பை - கொடு
4. மலர் - மலர் பறி
5. வா – வா போகலாம்

2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.

| | | |
|---|---|---|
| காண் | - | காணல் |
| சிரி | - | சிரித்தல் |
| படி | - | படித்தல் |
| தடு | - | தடுத்தல் |

ஆ) சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக:-

| | |
|---|---|
| "தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை<br>தேரும் சிலப்பதிகாறமதை<br>ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்<br>ஓதி யுனர்ந்தின் புருவோமே"<br>-கவிமணி தேசிக விநாயகனார் | தேனிலே ஊறிய செந்தமிழின்- சுவை<br>தேரும் சிலப்பதிகாரமதை<br>ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்<br>ஓதி யுணர்ந்தின் புறுவோமே"<br>-கவிமணி தேசிக விநாயகனார் |

இ) கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

(குவியல், குலை, மந்தை,கட்டு )

| சொல் | கூட்டப் பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | கற்குவியல் | புல் | புற்கட்டு |
| பழம் | பழக்குலை | ஆடு | ஆட்டுமந்தை |

ஈ) வினை முற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

விடை : கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.

2. ஊட்டமிகு உணவு உண்டார், அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

விடை:ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

விடை: நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

4.பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

விடை: பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

பொதுக்கட்டுரை

1. குமரிக்கடல்முனையையும், வேங்கடமலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ்தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச்சாரும். எழில் சேர்கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி,சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக்கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

- குறிப்புச் சட்டகம்
- முன்னுரை
- சிற்றிலக்கியம்
- காப்பியம்
- நீதி இலக்கியம்
- முடிவுரை

முன்னுரை:

குமரிக்கடல் முனையையும், வேங்கடமலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ்தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர்கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக்கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்ற தலைப்பில் கட்டுரை காண்போம்.

சிற்றிலக்கியம்:

சிற்றிலக்கியங்களான பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

காப்பியம்:

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

நீதி இலக்கியம்:

திருக்குறள் போன்ற நீதி இலக்கியங்களைஇயற்றினர்.

முடிவுரை:

தமிழை வளர்க்க நம்மால் இயன்றதைச் செய்வோம்.

மொழியோடு விளையாடு

சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:-

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன்,பூ

| | |
|---|---|
| தேன்மழை | பூ விலங்கு |
| பொன்செய் | பொன்விலங்கு |
| மணிவிளக்கு | பூமழை |
| மணிமேகலை | வான்மழை |

எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண் சாண் | எட்டு | அ |
| ஐந்து சால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும்இரண்டும்சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச, உ |
| ஆனை ஆயிரம் அமரிடைவென்றமானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

கற்பவைகற்றபின் :

ஏறுவேன் - ஏறுதல்
அழைக்கும் -அழைத்தல்
அமர்வேன் - அமர்தல்
பார்ப்பேன் - பார்த்தல்
எய்தும் - எய்தல்



பார்! பார்! காட்சி பார்!
கண்ணைக் கவரும் காட்சி பார்!
கருத்தைக் கவரும் காட்சி பார்!
கவினுற எழுத காட்சி பார்!
எழுத எழுத மகிழ்ச்சி பார்!
பார்! பார்! காட்சி பார்!

(அனைத்து காட்சிகளுக்கும் இதையே எழுதலாம்)

கலைச் சொல் அறிவோம்

1. Vowel -உயிரெழுத்து
2. Consonant - மெய்யெழுத்து
4. Monolingual - ஒருமொழி
5. Conversation - உரையாடல்

3. Homograph –ஒப்பெழுத்து 6. Discussion – கலந்துரையாடல்

**மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக**

காந்தி தெரு.
07.08.2025

அன்புள்ள நண்பருக்கு,

வணக்கம். நலம் நலமறிய ஆவல். மாநில அளவில் நடைப்பெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்றமைக்கு வாழ்த்துகள்! மற்றவை நேரில்.

இப்படிக்கு
என்றும் அன்புடன்
அஅஅஅஅ



**உறைமேல் முகவரி**
பெறுநர்
ஆஆஆஆஆ,
2. பாரதி நகர்,
இஇஇஇஇ.

இயல்-2

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. 'பரிபாடல் அடியில் விசும்பில் இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?

அ) வானத்தையும் பாட்டையும், ஆ) வான்வெளியில், பேரொலியில்
இ) வானத்தில், பூமியையும், ஈ) வானத்தையும் பேரொலியையும்

2. செய்தி 1- ஒவ்வோர் ஆண்டும் சூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3 இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.

அ) செய்தி 1 மட்டும் சரி,
ஆ) செய்தி 1.2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி,
ஈ) செய்தி 1.3 ஆகியன சரி

3. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) கொண்டல் -1. மேற்கு, ஆ) கோடை - 2. தெற்கு
இ) வாடை - 3.கிழக்கு, ஈ) தென்றல் - 4. வடக்கு

அ) 1.2.3.4 ஆ) 3.1.4.2 இ) 4.3.2.1 ஈ) 3,4,1,2

4. மகிழுந்து வருமா? என்பது- - - - - - - - - - -

அ) விளித்தொடர், ஆ) எழுவாய்த் தொடர், இ) வினையெச்சத் தொடர், ஈ) பெயரெச்சத் தொடர்

5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது -

அ) வேற்றுமை உருபு, ஆ) எழுவாய், இ) உவம உருபு, ஈ) உரிச்சொல்

குறுவினா:

1. நமக்கு உயிர் காற்று

காற்றுக்கு வரம் மரம் - மரங்களை

வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

விடை:

- ✓ காற்று உயிருக்கு நாற்று!
- ✓ நட்டு வளர்ப்போம்! வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்!
- ✓ மரங்களை வளர்ப்போம்! மாசு தடுப்போம்!

**2.** எழுது என்றான்' என்பது விரைவு காரணமாக, 'எழுது எழுது' என்றாள் என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

விடை: 'சிரித்துச்சிரித்துப் பேசினார்' - மகிழ்ச்சி

3. கட்டுரை படித்த - இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக.

விடை:கட்டுரையைப் படித்த மாணவன்.

4. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

விடை:

- ✓ முதுகினால் சூரியனை மறைக்கும் - துணிச்சல்
- ✓ தாகம் தீர்க்கும் - கருணை

**5** .தமிழர்கள், வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?

விடை:

- ✓ கிழக்கு - கொண்டல்
- ✓ மேற்கு - கோடை
- ✓ வடக்கு - வாடை
- ✓ தெற்கு - தென்றல்

சிறுவினா

1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான். இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான். முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசினால் ..... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

விடை:

1. உயிராக நான்; மழையாக நான்.
2. நான்கில் மூன்று பங்கு நான்.
3. அனைத்தையும் தருவேன் நான்.

**2..** உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

**விடை:**

- ✓ ஐம்பூதங்களும் தோன்றின.
- ✓ தொடர் மழையால் பூமி மூழ்கியது.
- ✓ உயிர்கள் உருவாகி வளர்ந்தன.

3. வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய பாடலைப் பாடிக் காட்டினார். இதை மாணவர்கள் கவனமாகக் கேட்டுப் பாடினர். மாணவர்கள் கேட்ட பாடலில் இருந்து ஆசிரியர் சிறு வினாக்களைக் கேட்டார். இப்பாடல் குறித்த உங்கள் கருத்துகளை எழுதி வாருங்கள். நன்றாக

எழுதுபவருக்குப் பரிசு உள்ளது என்றும் ஆசிரியர் கூறினார். வண்ணமிட்ட சொற்களுக்கான தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிக

விடை:

1. பாடிக் காட்டினார் – வினையெச்சத் தொடர்
2. கேட்டுப் பாடினர் – வினையெச்சத் தொடர்
3. கேட்ட பாடலில் – பெயரெச்சத் தொடர்
4. சிறுவினாக்களைக் கேட்டார் -வேற்றுமைத் தொடர்
5. எழுதுபவருக்குப் பரிசு - வேற்றுமைத் தொடர்

நெடுவினா

**1.** காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

| |
|---|
| குறிப்புச் சட்டகம் |
| முன்னுரை |
| காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகள் |
| முடிவுரை |

முன்னுரை:

காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை இக்கட்டுரையில் காண்போம்.

காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகள்:

- ✓ மரங்களை நடவேண்டும்.
- ✓ மரங்களை வெட்டக் கூடாது.
- ✓ தனித்தனி வாகனங்களில் செல்லக்கூடாது.
- ✓ பொதுப் போக்குவரத்தில் செல்ல வேண்டும்.
- ✓ உயரமான புகைபோக்கிகளைப் பயன்படுத்த வேண்டும்.
- ✓ மின்சார வாகனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

முடிவுரை:

காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை இக்கட்டுரையில் கண்டோம்.

**2.** 'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ✓ முன்னுரை |
| ✓ பிற உயிர்களை நேசிக்கும் பண்பு |
| ✓ முடிவுரை |

முன்னுரை:

"பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினைக் காண்போம்.

பிற உயிர்களை நேசிக்கும் பண்பு !

- ❖ ஒரு வீட்டின்முன் இடம் காலியாக இருந்தது.
- ❖ அங்கு முருங்கை நட்டு வளர்த்தனர்.
- ❖ அனைவரும் பயன்பெற்றனர்.
- ❖ மகிழ்ச்சியாக இருந்தனர்.
- ❖ காற்றில் முருங்கை சாய்ந்தது.
- ❖ மிகவும் வருந்தினர்.
- ❖ மீண்டும் முருங்கை வளர்ந்தது. மகிழ்ச்சி அடைந்தனர்.

முடிவுரை:

'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினைக் கண்டோம்.

3. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
வினளந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க

| | | |
|---|---|---|
| மையக் கருத்து | : | காற்றைப்பாராட்டல் - பாடலை உரைநடை வடிவில் எழுதுக |
| மோனை நயம் | : | மலர்ந்தும் - மலராத |
| எதுகை நயம் | : | நதியில் - பொதிகை |
| இயைபுநயம் | : | வண்ணமே - அன்னமே - மன்றமே |
| அணிநயம் | : | உவமையணி |

**மொழியைஆள்வோம்:**

**கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப்பயன்படுத்தி ஒருதொடர்அமைக்க:-**

| | |
|---|---|
| அ) இயற்கை - செயற்கை | செயற்கைய விட இயற்கை சிறந்தது. |
| ஆ) கொடு - கோடு | கொடுப்பதற்குக் கோடு இடக்கூடாது. |
| இ) கொள் - கோள் | கோள்களை அறிந்து கொள். |
| ஈ) சிறு - சீறு | சிறு பூனையும் சீறும். |
| உ) தான் - தாம் | தான் என்று இருக்காமல் தாம் என இருக்க வேண்டும். |
| ஊ) விதி - வீதி | விதியால் வீதிக்கு வந்தான். |

**குறிப்பு: இயற்கை என்பதற்கு பதில் செயற்கை என்று எழுதி விட்டேன். மேற்கண்ட தொடர்களையும் இவ்வவாறு மாற்றிக் கொள்ளலாம்)**

**வாழ்த்து மடல் எழுதுக:**

**மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

வாழ்த்து மடல்

அ அஅ,
07-08-2025.

அன்புள்ள நண்பருக்கு,

வணக்கம். நலம். நலம் அறிய ஆவல். மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றதற்கு வாழ்த்துகள்! மற்றவை நேரில்.

இப்படிக்கு,
என்றும் அன்புடன்
ஆ ஆஆ.

உறைமேல் முகவரி:

இஇஇ,
86, தமிழ்நகர்,
ஈ ஈஈ - 2

**உங்கள் கிராமத்திற்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் வரைக.**

**நூலக வசதி வேண்டி விண்ணப்பம்**

அனுப்புநர்

அஅஅஅஅ,
இஇஇஇஇ,
உஉஉஉஉ.

பெறுநர்

பொது நூலக இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகம்,
சென்னை 600 002.

ஐயா,

**பொருள்: நூலக வசதி வேண்டுதல் சார்பு.**

வணக்கம். எங்கள் ஊரில் 1000 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவ்வூரில் படித்தவர்களும், பள்ளி, கல்லூரி மாணவர்களும் உள்ளனர். எனவே, எங்கள் ஊருக்கு நூலகம் அமைத்திட ஆவன செய்யுமாறு தங்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

நன்றி,

இடம் : உஉஉஉ
நாள் : 14.08.2025
இணைப்பு :

ஊர்ப் பொதுமக்களின் கையொப்பபம்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅஅ.

உறைமேல் முகவரி
பெறுநர்
பொது நூலக இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகம்,
சென்னை 600 002.

**மொழியோடு விளையாடு:**

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க:-**

| | |
|---|---|
| முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும், நீக்காவிட்டாலும் வாசனை தரும். | நறுமணம் |
| பழமைக்கு எதிரானது, எழுதுகோலில் பயன்படும். | புதுமை |
| இருக்கும்போது உருவமில்லை, இல்லாமல் உயிரினம் இல்லை. | காற்று |
| நாலெழுத்தில் கண் சிமிட்டும், கடையிரண்டில் நீந்திச் செல்லும். | விண்மீன் |
| ஓரெழுத்தில் சோலை, இரண்டெழுத்தில் வனம் | காடு |

**நிற்க அதற்குத்தக:**

**புயல் முன்னெச்சரிக்கை**

**1. புயல்வந்தால் பாதுகாப்பாக இருப்பேன்.**
**2. புயல் வந்தால் உணவை எடுத்து வைப்பேன்.**
**3. புயல் வந்தால் ஆவணங்கள் எடுத்து வைப்பேன்.**
**4. புயல் வந்தால் மின்சாரம் துண்டிப்பேன்.**

**கற்பவை கற்றபின்.**

**1. தொடர் வகைகளை எழுதுக.**

- ❖ பழகப் பழக - அடுக்குத் தொடர்
- ❖ வந்தார் அண்ணன் - வினைமுற்றுத் தொடர்
- ❖ வடித்த கஞ்சியில் - பெயரச்சம்
- ❖ கவிதைகளின் தொகுப்பு - வேற்றுமைத் தொடர்
- ❖ நன்றாக பேசினான் - வினையெச்சத் தொடர்
- ❖ இறங்கினார் முகமது - வினைமுற்றுத் தொடர்
- ❖ அவர் பாடகர் - எழுவாய்த் தொடர்
- ❖ கேட்ட பாடல் - பெயரெச்சத் தொடர்
- ❖ கேட்காத பாடல் - பெயரெச்சத் தொடர்
- ❖ அடுக்கு அடுக்காக - அடுக்குத் தொடர்

**கலைச்சொற்கள்**

1. Storm - புயல்
2. Land Breeze - நிலக் காற்று
3. Tornado - சூறாவளி
4. Sea Breeze - கடற் காற்று
5. Tempest - வன்புயல்
6. Whirlwind - சுழல்காற்று

**இயல்-3**

**திறன் அறிவோம்**

**பலவுள் தெரிக.**

**1. பின் வருவனவற்றுள் முறையான தொடர் எது?**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

**இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**2. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது**

அ) சுட்டி **ஆ) கிண் கிணி** இ) குழை ஈ) சூழி

**3. காசிக் காண்டம் என்பது**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

**இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்** ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**4. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை-**

அ) நிலத்திற்கேற்ற விருந்து **ஆ) இன்மையிலும் விருந்து**

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து.

**5. நன்மொழி என்பது**

**அ) பண்புத் தொகை** ஆ) உவமைத் தொகை இ) அன்மொழித் தொகை (ஈ) உம்மைத் தொகை

**குறுவினா**

**1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

விடை: வணக்கம். நலமா? நீர் அருந்துங்கள். உணவு உண்ணுங்கள்.

2. "தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி" என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

<u>விடை</u>:இல்லை, நல்ல மனம் வேண்டும்.

**3. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் குறிப்பிடுகிறது?**

<u>விடை:</u> சிலம்பு, கிண்கிணி, அரைவடம், சுட்டி, குண்டலம்.

**4. <u>கல்வியும் செல்வமும்</u> பெற்ற பெண்கள். <u>விருந்தும் ஈகையும்</u> செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.- அடிக்கோடிட்ட சொற்களை உம்மைத் தொகையாக மாற்றி எழுதுக.**

விடை: கல்வி செல்வம், விருந்து ஈகை

**5. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக.**

<u>விடை:</u>

- ✓ தண்ணீர்குடி - தண்ணீரைக்குடி -இரண்டாம் வேற்றுமைத் தொகை.
- ✓ தயிர்க்குடம் – தயிரை உடைய குடம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

<u>**சிறுவினா**</u>

**1. 'இன்மையிலும் விருந்தோம்பல்' குறித்துப் புறநானூற்றுப் பாடல் தரும் செய்தியை எழுதுக.**

<u>விடை:</u>

வறுமையிலும் விருந்தளித்தனர்.

விதைநெல் விருந்தளித்தனர்.

வாளைப் பணயம் வைத்து விருந்தளித்தனர்.

**2.வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

<u>விடை:</u>

- ✓ சிலம்புகள் ஆடட்டும்.
- ✓ அரைவடங்கள் ஆடட்டும்.
- ✓ வயிறு ஆடட்டும்.
- ✓ நெற்றிச்சுட்டி ஆடட்டும்.

**3. "தனித்து உண்ணாமை' என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையாக அமைந்தது. இப்பண்பு இக்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்களைப் பட்டியலிடுக.**

<u>விடை:</u>

- ✓ கொடுத்து உண்ணும் வழக்கமே குறைந்து விட்டது.
- ✓ நெருங்கிய உறவினர்களே விருந்தினர் என்றனர்.
- ✓ தமிழர் இன்று கதவுமூடி உண்ணுகின்றனர்.

**4. மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தன் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன்.**

**பத்தியைப் படித்துத் தொகை நிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.**

**விடை:**

1. நடைப் பயிற்சி – இரு பெயரொட்டுப் பண்புத் தொகை -
2. மார்கழித்தி ங்கள் – இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
3. செங்காந்தள் மலர்கள் – இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
4. செங்காந்தள் – பண்புத் தொகை
5. வீடு சென்றேன் – வேற்றுமைத் தொகை.

**நெடு வினா**

**1. சங்க காலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் விளக்குக.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| தமிழர் விருந்தோம்பல் |
| முடிவுரை |

**முன்னுரை:**

சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் இங்கே காண்போம்.

**தமிழர் விருந்தோம்பல்**

- தனித்து உண்ணாமை.
- விருந்தோம்பலுக்கு நேரம், காலம் இல்லை.
- வறுமையிலும் விருந்தோம்பல் செய்தனர்.
- நிலத்திற்கேற்ற விருந்து அளித்தனர்.
- விருந்தை எதிர்கொள்ளும் தன்மை உடையவர்கள்.

**முடிவுரை:**

சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் இங்கே கண்டோம்.

**2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| அன்னமய்யா பெயர்ப் பொருத்தம் |
| முடிவுரை |

**முன்னுரை :**

- கிராமத்து மக்களின் விருந்தோம்பல் பற்றி கி.ராஜநாராயணன் எழுதிய கதை.

**அன்னமய்யா – பெயர்ப்பொருத்தம் :**

- அன்னமய்யா ஒரு வாலிபனை அழைத்து வந்தார். அவன் கடும் பசியில் இருந்தான்.
- அன்னமய்யா கலயத்தில் இருந்த நீத்துப்பாகத்தை வடித்துக் கொடுத்தார்.
- வந்தவன் அன்னமய்யாவின் பெயரைக் கேட்டு "என்ன ஒரு பெயர்ப்பொருத்தம்" என்றான்.
- அப்படியே சிறிது நேரம் தூங்கினான்.
- மதிய உணவுக்குப் பின் மீண்டும் தூங்கினான்.

முடிவுரை

- அன்னமய்யாவின் செயலுக்கும் பெயருக்கும் பொருத்தமாக உள்ளது.

**3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை |
| நான் செய்த விருந்தோம்பல் |
| முடிவுரை |

**முன்னுரை:**

எங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நான் செய்த விருந்தோம்பலைக் காண்போம்.

**நான் செய்த விருந்தோம்பல்:**

- ✓ விருந்தினரை வரவேற்றேன்.
- ✓ கலந்துரையாடினேன்.
- ✓ விருந்து வைத்தேன்.
- ✓ நகர்வலம் சென்றோம்.
- ✓ இரவு விருந்து அளித்தேன்.
- ✓ பிரியாவிடை அளித்தேன்.

**முடிவுரை:**

எங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நான் செய்த விருந்தோம்பலைக் கண்டோம்.

**பழமொழிகளை நிறைவு செய்க:-**

| | | |
|---|---|---|
| 1 | உப்பில்லாப் | பண்டம் குப்பையிலே. |
| 2 | ஒருபானைச் | சோற்றுக்கு ஒரு சோறுபதம். |
| 3 | உப்பிட்டவரை | உள்ளளவும் நினை. |
| 4 | விருந்தும் | மருந்தும் மூன்று நாள். |
| 5 | அளவுக்கு | மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. |

**கடிதம் எழுதுக.**

**உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.**

**முறையீட்டுக் கடிதம்**

அனுப்புநர்

அ அஅ,
12,கம்பர் தெரு,
இ இஇ.

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
ஆஆஆ.

ஐயா,

**பொருள் : உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுதல் சார்பு.**

வணக்கம். சேலத்தில் உள்ள தென்றல் உணவு விடுதியில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது. அந்த உணவகத்தின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

இடம்: ஆஆஆ. தங்கள் உண்மையுள்ள

நாள்: 07-08-2025. அ அஅ.

**இணைப்பு : பற்றுச் சீட்டு.**

**உறை மேல் முகவரி :**

பெறுநர்,

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,

ஆஆஆ.

**கற்பவை கற்றபின் :**

வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.

அன்புச் செல்வன் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

தொடுதிரை – வினைத்தொகை

மோர்ப்பானை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

மோர் கொடுக்கவும் – இரண்டாம் வேற்றுமைத்தொகை .

**மொழியோடு விளையாடு**

விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஓர் அறநூலின் பெயரைக் கண்டுபிடிக்க:-

| வினா | குறிப்பு | விடுபட்டஎழுத்து | நூலின்பெயர் |
|---|---|---|---|
| இ-------கு | பறவையிடம் இருப்பது | ற | திருக்குறள் |
| கு------தி | சிவப்பு நிறத்தில் இருக்கும் | ரு | |
| வா------- | மன்னரிடம் இருப்பது | ள் | |
| அ---------கா | தங்கைக்கு மூத்தவள் | க் | |
| ம-------------- | அறிவின் மறு பெயர் | தி | |
| பட-------------- | நீரில் செல்வது | கு | |

**இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:-**

| | | |
|---|---|---|
| 1 | சிலை - சீலை | சிலைக்குச் சீலைகட்டினர் |
| 2 | தொடு - தோடு | தோட்டினைத் தொட்டான் |
| 3 | மடு - மாடு | மடுவின் மேல்மாடு நின்றது |
| 4 | மலை - மாலை | மாலையில் மலைக்குச் சென்றான் |
| 5 | வளி - வாளி | வளி வாளியைத் தள்ளியது |
| 6 | விடு - வீடு | பள்ளி விட்டதும் வீட்டிற்குச் சென்றான் |

**கலைச் சொற்கள்**

1. Hospitality –விருந்தோம்பல்
2. Wealth - செல்வம்.
3. Baby shower - வளைகாப்பு
4. House warming – புதுமனை புகுவிழா
5. Feast - விருந்து

## திருக்குறள்

**குறுவினா**

**1. நச்சப்படாதவன்' செல்வம் இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

**விடை :** விரும்பப்படாதவன்

**2. இவ்வுலகம் நமக்கு உரிமை உடையதாக வேண்டு மென்றால் நாம் செய்ய வேண்டியதை எழுதுக.**

**விடை :** நடுவு நிலைமையோடு இரக்கம் காட்ட வேண்டும்

**3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

✓ உயிரை விடச் சிறப்பாகப் பேணிக்காக்கப்படும் – உயிரினும் ஓம்பப்படும்

✓ ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை – ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர்.

✓ ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது – நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று.

**4. செல்வம் பெருகுவதும் வறுமை வந்து சேர்வதும் எதனால் என வள்ளுவர் உரைக்கின்றார்?**

<u>விடை :</u> முயற்சி / முயற்சி இன்மை

**<u>சிறுவினா</u>**

1. வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

✓ **இக்குறளில் உவமை அணி பயின்று வந்துள்ளது.**

**<u>உவமை அணி</u>:**

உவமை, உவமேயம், உவம உருபு ஆகியன வெளிப்படையாக வரும்.

**<u>அணிப்பொருத்தம்</u>:**

✓ உவமை -வழிப்பறி செய்பவன்.
✓ உவமேயம் -வரி விதிக்கும் மன்னன்.
✓ உவமஉருபு - போலும்

**2. ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக**

❖ ஒழுக்கம் உயிரைவிடச் சிறந்தது.
❖ ஒழுக்கம் உள்ளவர் உயர்வு அடைவர்.
❖ உலகத்தோடு இணைந்து வாழாதவர் அறிவு இல்லாதவரே.

## இயல்-4

**திறன் அறிவோம்**

**பலவுள் தெரிக.**

1. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இலக்கியம் பிற மொழிப்படைப்பினைத் தழுவித் தமிழில் படைக்கப்பட்டது?

அ) திருக் குறள் **<u>ஆ) கம்பராமாயணம்</u>** இ) கலித்தொகை ஈ) சிலப்பதிகாரம்

2. இடைக் காடனாரின் பாடலை இகழ்ந்தவர்____, இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்____

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன்
**<u>ஈ) மன்னன், இறைவன்</u>**

3. உவப்பின் காரணமாக அஃறிணையை உயர்திணையாகக் கொள்வது

அ) இட வழுவமைதி ஆ) பால் வழுவமைதி **<u>இ) திணை வழுவமைதி</u>** ஈ) கால வழுவமைதி

4. இரவீந்திரநாத்தாகூர் ____ மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ____ மொழியில், மொழி பெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

அ) ஆங்கில, வங்காளம் **<u>ஆ) வங்காள, ஆங்கில,</u>** இ) வங்காள, தெலுங்கு ஈ) தெலுங்கு, ஆங்கில

5. படர்க்கைப் பெயரைக் குறிப்பது எது?

அ) யாம் ஆ) நீவிர் **<u>இ) அவர்</u>** ஈ) நாம்

**குறுவினா**

**1. கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப்புலவன் தென்சொல்"**

இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

<u>விடை :</u> குலேசபாண்டியன் , இடைக்காடனார்

**2. மொழி பெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.**

<u>விடை</u>:

❖ மொழி வளம் பெருகும்.
❖ பிறரது பண்பாடு, நாகரிகத்தை அறியலாம்.

**3. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக**

**விடை: அமர் + த் (ந்) + த் + ஆன்**

அமர்-பகுதி, த்-சந்தி, ந்-விகாரம், த்-இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**4. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன், இத்தொடர் காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

விடை : உறுதித் தன்மை – கால வழுவமைதி.

**5. சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்கமாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.**

விடை:**"சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்கும். புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிர கடிக்காது."** என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.

**சிறுவினா :**

**1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.**

விடை:

- ❖ பாடலை மதிக்கவில்லை.
- ❖ புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
- ❖ இறைவன் தென்கரையில் தங்கினார்.
- ❖ மன்னன் இடைக்காடனாருக்குச் சிறப்பு செய்தான்.

**2. பல துறைகளின் வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?**

- ❖ ஊடகங்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- ❖ வணிக விளம்பரங்களுக்கு உதவுகிறது.
- ❖ புதுவகையான சிந்தனைகளுக்கு உதவுகிறது.

**3. ஐக்கியநாடுகள் அவையில் மொழி பெயர்ப்பு.**

**ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழி பெயர்ப்பது: ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழி பெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணி கேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழி பெயர்த்து ஒலி வாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர்கள் தம்முன் உள்ள காதணி கேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வர். இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

விடை:

1) மொழி பெயர்ப்பு என்பது யாது?
2) Interpreting என்பதன் தமிழாக்கம் என்ன?
3) மொழி பெயர்ப்பாளர்கள் எங்கு அமர்ந்திருப்பார்கள்?
4) ஒருவர் பேசும்போதே மொழி பெயர்ப்பது------- என்று சொல்லப்படுகிறது.
5) ஐ.நா. அவையில் எத்தகைய வசதி உள்ளது?

**4. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், 'இலட்சுமி கூப்பிடுகிறாள், போய்ப்பார்" என்றார். 'இதோ சென்று விட்டேன்' என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக் கொடுத்து, 'என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்' என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக்**

**குடித்தாள் இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக. ஏதேனும் இரண்டு வழுவமைதிகளை எடுத்துக் காட்டுடன் விளக்குக.**

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. குட்டி | - | மரபு வழுவமைதி |
| 2. இலட்சுமி கூப்பிடுகிறாள் | - | திணை வழுவமைதி |
| 3. இதோ சென்று விட்டேன் | - | கால வழுவமைதி |
| 4. குடித்தாள் | - | திணை வழுவமைதி |

**நெடு வினா :**

**1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக**

**விடை:**

- ❖ பாடலை மதிக்கவில்லை.
- ❖ புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
- ❖ இறைவன் தென்கரையில் தங்கினார்.
- ❖ மன்னன் இறைவனைக் காணச் சென்றார்.
- ❖ இறைவன் தவற்றைச் சுட்டிக் காட்டினார்.
- ❖ மன்னன் இடைக்காடனாருக்குச் சிறப்பு செய்தான்.

**2. கற்கை நன்றே கற்கை நன்றே**

**பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை, மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ❖ முன்னுரை |
| ❖ கல்வியில் வென்ற மேரி |
| ❖ முடிவுரை |

முன்னுரை

- மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதை.

புதிய நம்பிக்கை :

- மேரி பருத்திக் காட்டில் வேலை செய்யும் ஏழைச் சிறுமி.
- மேரியின் குடும்பத்தில் யாரும் படிக்கவில்லை.
- ஒருநாள் தன் தாயுடன் வில்சன் வீட்டில் சென்று விளையாடினாள்.
- மேசையில் இருந்த புத்தகத்தை எடுக்கும்போது அங்குள்ள சிறுமி, "உனக்குப் படிக்கத் தெரியாது" என்றாள்.
- மேரிக்கு அவமானமாக இருந்தது. படிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது.
- மிஸ். வில்சன் என்பவரின் உதவியால் மேரி படிக்கச் சென்றாள்.
- மேல்படிப்பு படிக்கச் செல்லும்போது ஊரே வாழ்த்தி அனுப்பியது.

முடிவுரை

- "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை.

**3. தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி – பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்- அறிவியல் கருத்துகள்- பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை. மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழி பெயர்ப்புக்கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.**

| குறிப்புச் சட்டகம் |
|---|
| ❖ முன்னுரை |
| ❖ மொழி பெயர்ப்புக்கலை |
| ❖ முடிவுரை |

**முன்னுரை:**

தமிழின் இலக்கிய வளம், கல்வி மொழி, பிற மொழிகளில் உள்ள இலக்கியவளங்கள், அறிவியல் கருத்துகள், பிற துறைக் கருத்துகள், தமிழுக்குச் செழுமை மொழி பெயர்ப்பும் தொடக்கமும் பற்றி இங்குக் காண்போம்.

**மொழி பெயர்ப்புக் கலை:**

- ❖ சங்கக் காலத்திலேயே மொழி பெயர்ப்பு இருந்தது.
- ❖ வட மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன.
- ❖ கம்பர் மொழி பெயர்ப்பு மூலம் சிறப்பு பெற்றார்.
- ❖ பல்துறை வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்பு அவசியம்.
- ❖ அனைத்துலக அறிவைப் பெறமுடியும்.

**முடிவுரை :**

தமிழின் இலக்கிய வளம், கல்விமொழி, பிற மொழிகளில் உள்ள இலக்கியவளங்கள், அறிவியல் கருத்துகள், பிறதுறைக் கருத்துகள், தமிழுக்குச் செழுமை மொழிபெயர்ப்பும் தொடக்கமும் பற்றி இங்குக் கண்டோம்.

**தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

1. கடம்ப வனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

<u>விடை :</u> **அழகிய** கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்

2. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

வி<u>டை :</u> **நிழல் தரும்** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

3. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

<u>விடை :</u> **நல்ல** வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

4. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

<u>விடை :</u> **சிறந்த** கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

5. குழந்தைகள் தனித் தனியே எழுதித் தரவேண்டும்.

<u>விடை :</u> **சுட்டிக்** குழந்தைகள் தனித் தனியே எழுதித்தர வேண்டும்

**மொழியோடு விளையாடு:**

**புதிர்ப் பாடலைப் படித்து விடையைக் கண்டு பிடிக்க.**

**தார் போன்ற நிறமுண்டு கரியுமில்லை**
**பார் முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை**
**சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை**
**சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளரு மில்லை**
**வீட்டுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன்,** நான் யார்?

<u>விடை :</u> **காகம்**

தொழிற் பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும்______யாவும், அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை * மண்ணுக்கு அடியில்______நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல், புதைத்தல்)

**விடை :** புதையல், புதைத்தல்

2. காட்டு விலங்குகளைச்______தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச்- - - திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்).

**விடை :** சுடுதல், சுட்டல்

3. காற்றின் மெல்லிய ______ பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான ______ பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்)

**விடை :** தொடுதல், தொடுத்தல்

4. பசுமையான______ஐக்______கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

**விடை:** காட்சி, காணுதல்

5. பொது வாழ்வில்______கூடாது.______ இல் அவரை மிஞ்ச, ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

**விடை :** நடித்தல், நடிப்பு

**கற்பவை கற்றபின்**

**கீழ்க்காணும் தொடர்களின் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

விடை : கால வழுவமைதி.

ஆ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்.

விடை : இட வழுவமைதி.

இ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.

விடை : கால வழுவமைதி.

ஈ) செல்வன். இளவேலன் இந்தச் சிறு வயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.

விடை : பால் வழுவமைதி.

**நிற்க அதற்குத்தக:**

**பள்ளியிலும், வீட்டிலும் நீ நடந்து கொள்ளும் விதம் குறித்து பட்டியலிடுக.**

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| 1. நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | 1. அதிகாலையில் எழுவேன். |
| 2. ஆசிரியர் சொல்படி நடப்பேன். | 2. பெற்றோர் சொல்படி நடப்பேன். |
| 3. ஆசிரியரிடம் பணிவுடன் நடந்து கொள்வேன். | 3. பெரியவர்களிடம் பணிவுடன் நடந்து கொள்வேன். |
| 4. நண்பர்களுடன் கலந்துரையாடுவேன். | 4.உறவினர்களுடன் கலந்துரையாடுவேன். |
| 5. நண்பர்களுக்கு உதவிகள் செய்வேன். | 5. பெற்றோருக்கு உதவிகள் செய்வேன் |

**படிப்போம் பயன் படுத்துவோம் (கலைச் சொற்கள்)**

1. Translation மொழிபெயர்ப்பு
2. Culture - பண்பாடு
3. Human Resource - மனிதவளம்.
4. Transfer - மாறுதல்
5. Multi media - பல்துறைஊடகம்

## குறிப்புகளைப் பயன்படுத்தி மதிப்புரை எழுதுக.

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நாலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்புகள் - நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் – மொழிநடை- வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.

**பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை கட்டுரை கவிதை நூலக்கான மதிப்புரை எழுதுக.**

**மதிப்புரை எழுதுதல்**

பரமார்த்த குருகதை

| குறிப்புச் சட்டம் |
|---|
| நூலின் தலைப்பு |
| நூலின் மையப் பொருள் |
| மொழி நடை |
| வெளிப்படுத்தும் கருத்து |
| நூலின் நயம் |
| நூலின் கட்டமைப்பு |
| சிறப்புக்கூறு |

**1. நூலின் தலைப்பு:**

பரமார்த்த குருகதை.

**2. நூலின் மையப்பொருள்**

ஐந்து சீடர்கள் குருவிடம் வைத்துள்ள முரட்டு பக்தியை கதையாக வைத்திருப்பதும், விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்பதையும் மையப் பொருளாகக் கொண்டுள்ளது பரமார்த்த குருகதை.

**3. மொழிநடை**

பாமரனுக்கும் புரிகின்ற நகைச்சுவை கலந்த எளிய மொழி நடையில் உள்ளது.

**4. வெளிப்படுத்தும் கருத்து**

பகுத்தறிவுடன் செயல்படவேண்டும்.

**5. நூலின் நயம்**

சிறுகதைக்கான நயங்கள் உள்ளன.

**6. நூலின் கட்டமைப்பு**

குழந்தைகள் விருப்பத்துடன் வாசிப்பதற்கு ஏற்ற சிறுகதை பரமார்த்த குருகதையாகும்.

**7. சிறப்புக்கூறு**

வீரமாமுனிவர் செந்தமிழால் எழுதியிருக்கிறார்.

**8. நூல் ஆசிரியர்**

"பராமர்த்த குருகதை" -யின் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவார்.

**இயல்-5**

**<u>திறன் அறிவோம்</u>**

**பலவுள் தெரிக.**

1. கூற்று 1: போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.

கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத் தன்மை வளர அது உதவியது.

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு, இ) கூற்று 1 தவறு 2 சரி , **<u>ஈ) கூற்று1 மற்றும் 2 சரி</u>**

2. "மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ" இப்பாடல் அடியில் குறிப்பிடப்படாத நிறத்தைக் கண்டறிக.

அ) கருமை ஆ) பச்சை **<u>இ) பழுப்பு</u>** ஈ) நீலம்

3. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டுவிழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது – இத் தொடருக்கான வினா எது?

அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?

**ஆ) கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது?**

இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?

ஈ) யாருக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது?

4. சித்திரை, வைகாசி மாதங்களை------ காலம் என்பர்.

அ) முதுவேனில் ஆ) பின்பனி இ) முன்பனி **ஈ) இளவேனில்**

5. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்.

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள், ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

**இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்.** ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்



**குறு வினா**

1. சரயு ஆறு பாயும் இடங்களைப் பட்டியலிடுக.

**விடை :** சோலை, காடு, ஏரி, குளம், வயல்

2. அயற் கூற்றாக எழுதுக.

"கலைஞர், பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" – பேராசிரியர் அன்பழகனார்.

**விடை :** கலைஞரைப் பேராசிரியர் அன்பழகனார், பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர் என்றும் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் என்றும் பாராட்டியுள்ளார்.

3. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'

காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'

கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

**விடை:**

- ✓ பொய்யான வாழ்வு முடியப் போகிறது.
- ✓ காலனின் தூதர் கையில் உறங்குவாய்.

4. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத முதல், கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

உழவர்கள் மலையில் உழுதனர்.

முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**விடை:**

- ❖ உழவர் வயலில் உழுதனர்.
- ❖ நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**சிறு வினா**

1. மருத நிலத்தில் இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைக் கம்பரின் கலை நயத்துடன் எழுதுக.

**விடை:**

- ➢ மயில்கள் ஆடுகின்றன.
- ➢ தாமரை - விளக்கு .
- ➢ குவளை - கண்
- ➢ அலைகள் – திரைச் சீலைகள்.

2. கம்பராமாயணப் பாடல் அடிகளுக்கு ஏற்ற பொருளை எழுதுக.

கறங்கு போல விற்பிடித்த காலதூதர் கையிலே.

**விடை:** எமனின் தூதர் கையிலே.

தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின் வண்டுகள் இனிது பாட.

**விடை :** இசைபோல் வண்டுகள் பாடுகின்றன.

வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ.

<u>விடை :</u> யானைப்படை கண்டு புற முதுகுகாட்டி பயந்து ஓடும்வில் வீரனோ?

3. தமிழ் மொழிக்குக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.

<u>விடை:</u>

- தமிழ் வளர்ச்சித் துறையை உருவாக்கினார்.
- தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைப் பரவலாக்கினார்.
- உலகத் தமிழ் மாநாடு நடத்தினார்.



4.கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது: மலைப்பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன. காலப்போக்கில் பலமாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், பண்டைத் தமிழரின் திணை நிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

<u>விடை:</u>

- திணையின் அடிப்படையில் நிலம்.
- தனித்தனியே தொழில்களை மேற்கொண்டனர்.
- இன்றைய சூழலில் மாறவில்லை.

<u>**நெடுவினா**</u>

**1. போராட்டக்கலைஞர் – பேச்சுக்கலைஞர் – நாடகக்கலைஞர் – திரைக்கலைஞர் – இயற்றமிழ்க்கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**

| <u>குறிப்புச் சட்டகம்</u> |
|---|
| ➢ போராட்டக்கலைஞர் |
| ➢ பேச்சுக்கலைஞர் |
| ➢ நாடகக்கலைஞர் |
| ➢ திரைக்கலைஞர் |
| ➢ இயற்றமிழ்க்கலைஞர் |

<u>**போராட்டக்கலைஞர்**</u>

இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட்ட மாணவர்களைத் திரட்டி ஊர்வலம் சென்றார்.

<u>**பேச்சுக்கலைஞர்:**</u>

மேடைப் பேச்சினில் பெரு விருப்பம் கொண்டவர் கலைஞர்.

<u>**நாடகக்கலைஞர்:**</u>

தனது சிறப்பான தனி நடையால் பல நாடகங்களை எழுதினார்.

<u>**திரைக்கலைஞர்**</u>

தனது திறமையால் திரைக்கலையில் சிறந்து விளங்கினார்.

<u>**இயற்றமிழ்க்கலைஞர்**</u>

கலைஞர் பல சிறுகதைகளையும், புதினங்களையும் எழுதினார்.

**2. சந்தக்கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

**அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட இவ்வுரையைத் தொடர்க!**

**விடை:**

- ❖ கல்வியில் சிறந்தவர் கம்பர்
- ❖ சிறந்த சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.
- ❖ சொற்கள் அக்காட்சிகளை நம் கண்முன் காண வைக்கிறது.
- ❖ "சந்தக்கவிதையில் சிறக்கும் கம்பன்" என்பது உண்மை.

**3. பாய்ச்சல் கதையின் மையக்கருத்தைக் குறிப்பிட்டுக் கதையைச் சுருக்கி எழுதுக.**

| **குறிப்புச் சட்டகம்** |
|---|
| ➢ **முன்னுரை** |
| ➢ **அனுமார் ஆட்டம்** |
| ➢ **அழகுவின் ஆர்வம்** |
| ➢ **முடிவுரை** |

**முன்னுரை:**

பாய்ச்சல் கதையைச் சுருக்கமாக இங்குக் காண்போம்.

**அனுமாரின் ஆட்டம்:**

- ஒரு மனிதர் அனுமார் வேடமிட்டு ஆடினார்.
- இசைக்கேற்ப மக்கள் மகிழும் வண்ணம் ஆடினார்.
- அழகு என்ற சிறுவன் அதைப் பார்த்தான்.

**அழகுவின் ஆர்வம் :**

- அழகுக்கு அனுமாரைப் போலவே ஆடுவதற்கு ஆர்வம் வந்தது.
- அழகு அனுமார் ஆட்டத்தைச் சிறப்பாக ஆடினான்.
- அந்த மனிதருக்கு மகிழ்ச்சி அளித்தது.

**முடிவுரை:**

பாய்ச்சல் கதையைச் சுருக்கமாக இங்குக் கண்டோம்.

**பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றுக:-**

| **பிறமொழிச்சொல்** | **தமிழ்ச்சொல்** | **பிறமொழிச்சொல்** | **தமிழ்ச்சொல்** |
|---|---|---|---|
| கோல்ட் பிஸ்கட் | தங்கக் கட்டி | வெயிட் | எடை |
| யூஸ் | பயன்படுத்தி | எக்ஸ்பெரிமெண்ட்ரிப்பீட் | சோதனைமீண்டும் |
| ஆல் தி பெஸ்ட் | வாழ்த்துகள் | ஈக்வலாக | சமமாக |
| பட் | ஆனால் | ஆன்சரை | விடையை |

1. அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
   (தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)
   **விடை** : அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.
2. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.
   (தொடர் சொற்றொடராக மாற்றுக.)
   **விடை** : இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி அவற்றை புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்து புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.
3. கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார். கலைஞர், எழுத்துவழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.
   (கலவைச் சொற்றொடராக மாற்றுக.)
   **விடை** : கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்ததால் , எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.

4. காற்று மாசுபாட்டைக் குறைக்க குப்பை மேலாண்மையை மேற்கொண்டு பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை தந்து மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளைப் பயன்படுத்த வேண்டும்.
(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)
**விடை** : காற்று மாசுபாட்டைக் குறைக்க குப்பை மேலாண்மையை மேற்கொள்ள பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை தரவேண்டும். காற்று மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளைப் பயன்படுத்த வேண்டும்.
5. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)
**விடை** : ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.

**கட்டுரை எழுதுக**

உங்கள் பகுதியில் நடை பெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ➢ முன்னுரை |
| ➢ கலைத்திருவிழா |
| ➢ முடிவுரை |

**முன்னுரை:**

எங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாகக் காண்போம்.

**கலைத் திருவிழா:**

- ✓ எங்கள் ஊரில் கலைத் திருவிழா நடைபெற்றது.
- ✓ நாங்கள் குடும்பத்துடன் சென்றோம்.
- ✓ கலைத்திருவிழாவில் வண்ண விளக்குகள் இருந்தன.
- ✓ கலைத்திருவிழாவில் பல கலைகள் நிகழ்ந்தன.
- ✓ கலைத்திருவிழாவில் விளையாட்டுகள் இருந்தன.
- ✓ கலைத்திருவிழாவில் நாங்கள் மகிழ்ச்சியாக இருந்தோம்.

**முடிவுரை:**

எங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாகக் கண்டோம்.

**மொழியோடு விளையாடு**

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக:-**

1. வானம் **கருக்கத்** தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகர் முகம் **சிவந்தது.**
3. **வெள்ளந்தி** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பசும்புல்வெளிகளில்** கதிரவனின் **மஞ்சள்**வெயில் பரவிக்கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே ; உடல் **கறுத்து**விடும்.

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| **தங்கும், மரம்வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, பார்ப்பவர், விருது, தோற்பவர், கவிழும், விருந்து** |

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு **மரம்வீடு**
வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவை தரும் **மரவீடு**
2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்**
சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**
3. மலை முகட்டில் மேகம் **தங்கும்** அதைப்
பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**
4. வாழ்க்கையில் **தோற்பவர்** மீண்டும் வெல்வர்- இதைத்
தத்துவமாய்ப் **பார்ப்பவர்** முயற்சி மேற்கொள்வர்.
5. கை தட்டலே கவிஞர்க்கு **விருது** - அவையோரின்
ஆர்வமே அவருக்கு **விருந்து**.



**கலைச்சொல் தருக (படிப்போம்! பயன்படுத்துவோம்!**

1. PLAY WRIGHT – நாடக ஆசிரியர்
2. SCREENPLAY – திரைக்கதை
3. STORY TELLER கதை சொல்லி
4. AESTHETICS -அழகியல்

**வாழ்வியல் இலக்கியம் - திருக்குறள்**

**குறுவினா**

**1. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.**

விடை : மறைத்து வைக்கும் துன்பத்தைச் செய்யாதவர்.

2. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

விடை:

1. தஞ் / சம்-நேர்நேர் – தேமா.
2. எளி / யன் - நிரைநேர் – புளிமா.
3. பகைக் / கு - நிரைபு - பிறப்பு.

3. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

விடை : கொடுப்பவரைக் கண்டால், பிச்சை எடுப்பவரின் உள்ளம் மகிழும்.

4. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக. (பெரியகத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்)

விடை:

- ✓ உழைத்ததால் கிடைத்த ஊதியம்
- ✓ பகைவரின் ஆணவத்தை அழிக்கும்

**சிறுவினா**

**1. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.**

விடை:

- ✓ கருவி, காலம் அறிந்து செய்பவரே அமைச்சர் ஆவார்.
- ✓ மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சிமுறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், உலகியல்அறிவு ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.
- ✓ இவைகளைப் பெற்றால் சிறப்பாக வாழலாம்.

**2. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழு கலான். இக்குறளில் வஞ்சப்புகழ்ச்சிஅணி இடம் பெற்றுள்ளதை விளக்குக.**

**வஞ்சப்புகழ்ச்சி அணி** :

புகழ்வதுபோல பழிப்பதும், பழிப்பதுபோல புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சிஅணி.

**அணிப் பொருத்தம் :**

கயவரைப் புகழ்ந்து கூறி, பின் பழித்துக் கூறுவதால், இது வஞ்சப்புகழ்ச்சிஅணி.

**இயல்-6**

**<u>திறன்அறிவோம்</u>**

**பலவுள் தெரிக.**

1. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

**<u>இ) உழவு, ஏர், மண், மாடு</u>** ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் **<u>ஈ) சிலப்பதிகாரம்</u>**

**3. நச்சிலைவேல் கோக்கோதைநாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே…**

அ) பாண்டியநாடு, சேரநாடு, ஆ) சோழநாடு, சேரநாடு

**<u>இ) சேரநாடு, சோழநாடு</u>** ஈ) சோழநாடு, பாண்டியநாடு

**4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்.**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

**<u>இ) வலிமையை நிலைநாட்டல்</u>** ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**5. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே-**

**<u>அ) திருப்பதியும் திருத்தணியும்</u>** ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**<u>குறு வினா</u>**

1. பாசவர், வாசவர், பல்நிணவிலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

**<u>விடை:</u>**

- ✓ பாசவர் - வெற்றிலை விற்பவர்.
- ✓ வாசவர் - நறுமணப்பொருள் விற்பவர்.
- ✓ பல்நிணவிலைஞர் - இறைச்சி விற்பவர்.
- ✓ உமணர் - உப்பு விற்பவர்.

2. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ – இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

**<u>விடை :</u>** அள்ளல் - சேறு; பழனம் - வயல்.

3. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

**<u>விடை :</u>** வறுமை நிலையிலும் நூல்களையே வாங்குபவர் ம.பொ.சி.

**4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப் படுத்துக.**

**<u>விடை :</u>** வெட்சி x கரந்தை

வஞ்சி x காஞ்சி

நொச்சி x உழிஞை

5. பொதுவியல்திணை பற்றிக் குறிப்பெழுதுக.

**<u>விடை :</u>** புறத்திணைகளில் பொதுவான செய்திகளைக் கூறுவது பொதுவியல்திணை ஆகும்.

**6. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

**பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.**

**விடை:** பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.

<u>**சிறுவினா**</u>

**1. சேர, சோழ, பாண்டியநாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.**

<u>**விடை:**</u>

- ✓ சேரநாடு - சேரநாட்டின் பகைவர்களும், பறவைகளும் அஞ்சின.
- ✓ சோழநாடு - சோழநாடு நெல்வளமும், வீரமும் மிக்கது.
- ✓ பாண்டியநாடு – பாண்டியநாடு முத்துவளம் உடையது.

**2. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

ஆசிரியர் : ம.பொ.சி.

**இடம் : சிற்றகல் ஒளி**

பொருள் : எங்கள் தலையைக் கொடுத்தாவது தலைநகரைக் காப்பாற்றுவோம்.

விளக்கம் : செங்கல்வராயன் தலைமையில் கூட்டப்பட்ட கூட்டத்தில் ம.பொ.சி அவர்கள் "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கினார்.

**3. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்;
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும் "

**அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?**

<u>**விடை :**</u> சிலப்பதிகாரம்

**ஆ) பாடலில் உள்ள மோனையை எடுத்து எழுதுக.**

<u>**விடை :**</u> <u>ப</u>கர்வனர் -- <u>ப</u>ட்டினும்

**இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.**

<u>**விடை :**</u> ப<u>ட்</u>டினும் - - க<u>ட்</u>டு

**ஈ) காருகர் – பொருள் தருக.**

<u>**விடை :**</u> நெய்பவர்

**உ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?**

<u>**விடை :**</u> சந்தனம், அகில்.

<u>**நெடுவினா**</u>

**1. நாட்டு விழாக்கள்- விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| • முன்னுரை |
| • மாணவப் பருவமும், நாட்டுப் பற்றும் |
| • முடிவுரை |

**முன்னுரை:**

மாணவப் பருவமும், நாட்டுப் பற்றும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மாணவப் பருவமும், நாட்டுப் பற்றும்:**

- ❖ நாட்டு விழாக்கள் மூலம் நாட்டுப் பற்றைக் காட்ட வேண்டும்.
- ❖ விடுதலைப் போராட்ட வரலாற்றினை அறிந்து கொள்ள வேண்டும்.
- ❖ நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்குகொள்ள வேண்டும்.
- ❖ சமூகப் பொறுப்புடன் இருக்க வேண்டும்.

**முடிவுரை:**

மாணவப் பருவமும், நாட்டுப் பற்றும் பற்றி இக்கட்டுரையில் கண்டோம்.

**2. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.**

| | மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிக வளாகங்கள் |
|---|---|---|
| 1 | வீதிகளில் வணிகம் செய்யப்பட்டன. | கடைகளில் மட்டுமே விற்கப்படுகின்றன. |
| 2 | பட்டு, பருத்திநூல் ஆடைகள் விற்றனர். | ஆயத்த ஆடைகளை விற்கின்றனர். |
| 3 | முத்து, பொன்நகைகள் குவிந்திருந்தன. | வெள்ளி பொன் நகைகள் விற்கப்படுகின்றன. |
| 4 | கூலக்கடை வீதிகள் இருந்தன. | பல்பொருள் அங்காடிகள் உள்ளன. |

**3. எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரஸ்வதி, ராஜம்கிருஷ்ணன். கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், சின்னப்பிள்ளை ஆகியோர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| • முன்னுரை |
| • சமூகப் பணிகள் |
| • முடிவுரை |

**முன்னுரை:**

எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரஸ்வதி, இராஜம்கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், சின்னப்பிள்ளை ஆகியோர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்து இங்குக் காண்போம்.

**எம்.எஸ்.சுப்புலட்சுமி :**

இசை மேதையாகச் சிறந்து விளங்கினார். பல விருதுகளைப் பெற்றார்.

**பாலசரஸ்வதி:**

பரதநாட்டியத்தில் சிறப்புப் பெற்றவர். நம் நாட்டுப்பண்ணிற்கு மெய்ப்பாடுகளோடு ஆடினார்.

**இராஜம்கிருஷ்ணன்:**

சமூகச் சிக்கல்களைக் கதையாக எழுதக்கூடிய ஆற்றல் பெற்றவர் இவர்.-

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்:**

வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறு பணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர்.

**மதுரை சின்னப்பிள்ளை:**

இவர் மகளிரின் வாழ்வு மேம்பாட்டுக்காகப் பாடுபட்டார்.

<u>முடிவுரை:</u>

எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரஸ்வதி, இராஜம்கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், சின்னப்பிள்ளை ஆகியோர் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்து இங்குக் கண்டோம்.

**4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.**

<u>மகளிர் நாள் விழா</u>

இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள் : 07.08.2025

ஆசிரியர்கள், மாணவர்கள் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

**<u>மகளிர்நாள் விழா அறிக்கை.</u>**

**இடம்** : பள்ளிக் கலையரங்கம்.

**நாள்** : 07-08-2025

❖ ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

❖ தலைமை ஆசிரியர் அனைவரையும் வரவேற்றார்.

❖ இதழாளர் கலையரசி சிறப்புரை நிகழ்த்தினார்.

❖ விழா சிறப்பாக நடை பெற்றது.

**பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

| | |
|---|---|
| வரப்போகிறேன். | நான் வரப்போகிறேன். |
| இல்லாமல் இருக்கிறது. | நீர் இல்லாமல் இருக்கிறது. |
| கொஞ்சம் அதிகம். | குறும்பு கொஞ்சம் அதிகம். |
| முன்னுக்குப் பின். | முன்னுக்குப் பின் பேசுகிறான். |
| மறக்க நினைக்கிறேன். | துன்பங்களை மறக்க நினைக்கிறேன். |

**தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி , தமிழ் எண்ணுரு தருக.**

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவருக்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப் பெருமை சாற்றுகின்றன.

| <u>தொகைச் சொற்கள்</u> | <u>பிரித்து எழுதுக</u> | <u>தமிழ் எண்ணுரு</u> |
|---|---|---|
| மூவேந்தர் | மூன்று + வேந்தர் | ௩ |
| நாற்றிசை | நான்கு + திசை | ச’ |
| முத்தமிழ் | மூன்று + தமிழ் | ௩ |
| இருதிணை | இரண்டு + திணை | உ |
| முப்பால் | மூன்று + பால் | ௩ |
| ஐந்திணை | ஐந்து + திணை | ரு |
| நானிலம் | நான்கு + நிலம் | ச’ |
| அறுசுவை | ஆறு + சுவை | சூ |
| பத்துப்பாட்டு | பத்து + பாட்டு | கo |
| எட்டுத்தொகை | எட்டு + தொகை | அ |

**கடிதம் எழுதுக**

**நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்**

**அனுப்புநர்**

அ அஅ,
பாரதிதெரு,
தமிழ்நகர்,
ஆ ஆ ஆ.

**பெறுநர்**

ஆசிரியர்,
பாரதி நாளிதழ்,
இ இ இ இ.

ஐயா,

**பொருள்: கட்டுரையை வெளியிட வேண்டுதல் - சார்பு.**

வணக்கம். நான், 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளேன். தாங்கள் அந்தக் கட்டுரையைப் பொங்கல் மலரில் வெளியிட வேண்டுகிறேன்.

நன்றி.

இப்படிக்கு,
தங்கள்உண்மையுள்ள,
அ அஅஅஅ

இடம் : ஆ ஆ ஆ ஆ
நாள் : 04-03-2024
**இணைப்பு** : கட்டுரை

**உறைமேல்முகவரி:**

**பெறுநர்**
ஆசிரியர்,
பாரதி நாளிதழ்,
இ இ இ இ.

**அ.பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.**

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ

விடை : கம்பர், உமறுப்புலவர், ஜவாது புலவர், காசிம்புலவர், குணங்குடியார் மஸ்தான், சேகனாப் புலவர், செய்குதம்பிப் பாவலர்.

**ஆ.தொடரைப் படித்து விடையைக் கண்டறிக :-**

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் **கற்றல்.**
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை **கரு.**
3. கல்சிலை ஆகுமெனில், நெல் **சோறு** ஆகும்.
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து **எழுத்து.**
5. மீன் இருப்பது நீரில் : தேன் இருப்பது **பூவில்.**

( சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

**இ.கலைச்சொற்கள் (படிப்போம்; பயன்படுத்துவோம்!)**

1. Agreement - ஒப்பந்தம்
2. Discourse –சொற்பொழிவு
3. Monarchy –முடியாட்சி
4. Border - எல்லை
5. Rebellion – கிளர்ச்சி

## இயல்-7

தமிழ்

**பலவுள் தெரிக.**

**1. மேன்மை தரும் அறம் என்பது-**

**அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.**

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.

இ) புகழ் கருதி அறம் செய்வது. ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.

**2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் யாவர்?**

அ) உதியன்; சேரலாதன். **ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்.**

இ) பேகன் கிள்ளிவளவன். ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி.

3. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் எது?

**அ) ஒரு சிறு இசை** ஆ) முன் பின் இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

4. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று_______வேண்டினார்.

**அ) கருணையன், எலிசபெத்துக்காக** ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்-

**அ) அகவற்பா** ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**குறுவினா**

**1. குறிப்பு வரைக அவையம்.**

விடை : அவையம் - தீர்ப்பு கூறும் நீதிமன்றம்.

**2.. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?**

விடை : இளம்பயிர் போல கருணையன் தாயை இழந்து வாடினான்.

**3. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

விடை : இரண்டு அடிகளில் வருவது குறள்வெண்பா.

( எ-கா) பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

**4. சங்க இலக்கியத்தில் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டன எவை?**

விடை:

- நீர்நிலை பெருக்குதல்.
- நிலவளம் பெருக்குதல்.
- உணவு பெருக்குதல்.

**5. பழங்களை விடவும் நசுங்கிப்போனதாகக் கல்யாண்ஜி எதைக் குறிப்பிடுகிறார்?**

விடை : அடுத்தவர் மீதான அக்கறை.

**சிறுவினா**

**1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**

விடை:

வணிக அறம் - வணிகத்தில் அறம் வேண்டும்.
அறத்தில் வணிகம் இருக்கக்கூடாது.

போர் அறம் – அன்று போர் நெறிகளைப் பின்பற்றினர்.
இன்று சாதி, மதப் போர்கள் அறம் இன்றி நடக்கின்றன.

அரசியல் அறம் – அன்று மக்கள் நலனுக்காக ஆட்சி நடந்தது.
இன்று அரசியலில் அறம் வேண்டும்.

**2. வாய்மை பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.**

**விடை:**

- ❖ வாய்மையே சிறந்த அறம்.
- ❖ வாய்மை பேசும் நாக்கு உண்மையானது.
- ❖ நாக்கு இன்பம், துன்பம் இரண்டையும் தரும்.

**3. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

விடை:

- ❖ உயிர் பிழைக்கும் வழி.
- ❖ உறுப்புகள் இயங்கும் முறை.
- ❖ உணவினைத் தேடும் வழி.

4. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

- ❖ ஓசை : அகவல்
- ❖ தளை : ஆசிரியத்தளை
- ❖ அடி : மூன்று முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப
- ❖ சான்று : தூசும் துகிரும் .....

**5. 'சுற்றுச் சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

- ❖ வீட்டுத்தூய்மை
- ❖ மழைநீர் சேகரிப்பு
- ❖ பொதுப் போக்குவரத்து
- ❖ வீதித்தூய்மை
- ❖ மரங்களை வளர்த்தல்

## நெடுவினா

**1 . கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.**

விடை:

- ❖ கருணையன் தனது தாயை நல்லடக்கம் செய்தான்.
- ❖ கருணையன் தாயை இழந்து வாடினான்.
- ❖ கருணையன் செய்வதறியாது தவித்தான்.
- ❖ பறவைகளும், வண்டுகளும் கூச்சலிட்டன.

**2. கிடைப்பதற்கரிய திருமந்திரம் கிடைத்தவுடன் இராமானுசர் செய்த நிகழ்வுகளைத் தொகுத்து எழுதுக.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| • முன்னுரை |
| • இராமானுசர் செய்த நிகழ்வு |
| • முடிவுரை |

<u>**முன்னுரை:**</u>

**கிடைப்பதற்கரிய திருமந்திரம் கிடைத்தவுடன் இராமானுசர் செய்த நிகழ்வுகளைப் பற்றி இங்குக் காண்போம்.**

<u>**இராமானுசர் செய்த நிகழ்வு:**</u>

- பூரணர் இராமானுசரை அழைத்தார்.
- இராமானுசர் தனது சீடர்களுடன் சென்றார்.
- பூரணர் அவர்களுக்கு மந்திரத்தைக் கூறினார்.
- யாரிடமும் சொல்லக்கூடாது என்றார்.
- இராமானுசர் அனைவருக்கும் மந்திரத்தைக் கூறினார்.
- பூரணர் கோபம் கொண்டார்.
- இராமானுசரின் விளக்கத்தை ஏற்றார்.

<u>**முடிவுரை:**</u>

கிடைப்பதற்கரிய திருமந்திரம் கிடைத்தவுடன் இராமானுசர் செய்த நிகழ்வுகளைப் பற்றி இங்குக் கண்டோம்.

**3. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**உறவினருக்குக் கடிதம்**

7, அஅஅஅ,
14-05-2024.

**அன்புள்ள அத்தைக்கு,**

வணக்கம். நலம், நலமறிய ஆவல். எனது பள்ளியில் பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் பாதுகாப்பாக ஒப்படைத்தேன். அதற்காக எனது தலைமை ஆசிரியரும், ஆசிரியர்களும் இறைவழிபாட்டுக் கூட்டத்தில் என்னைப் பாராட்டினர். மகிழ்ந்தேன்.

இப்படிக்கு,
அன்புடன்
ஆஆஆஆஆ

**உறைமேல் முகவரி:**
**பெறுநர்**
இஇஇஇ,
2, பாரதி நகர்,
ஈஈஈஈஈ.

<u>**மொழியை ஆள்வோம்**</u>

**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக:-**

| | |
|---|---|
| **மனக் கோட்டை.** | **குமரன் மனக் கோட்டை கட்டினான்.** |
| **அள்ளி இறைத்தல்.** | **பாரி பணத்தை அள்ளி இறைத்தான்.** |
| **கண்ணும் கருத்தும்.** | **தமிழ்மொழி கண்ணும் கருத்துமாகப் படித்தாள்.** |
| **ஆறப் போடுதல்** | **கோபத்தை ஆறப்போட வேண்டும்.** |

**பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

**சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லிமலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிறமலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் 'கொல்லிவெற்பன்' 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லிமலையை வென்றவன்; 'கொல்லிவெற்பன்' எனவும் பிறமலைப்

பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**கடிதம் எழுதுக,**

**உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால், இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

**மின்வாரிய அலுவலருக்குக் கடிதம்**

அனுப்புநர்

அஅஅஅ,
பாரதி தெரு,
ஆஆஆஆஆ.

பெறுநர்

உதவிப் பொறியாளர் அவர்கள் ,
மின்வாரிய அலுவலகம்,
ஆஆஆஆஆ.

ஐயா,

**பொருள்: மின்விளக்குகளைப் பழுதுநீக்க வேண்டுதல் சார்பாக.**

வணக்கம். எங்கள் பகுதியில் உள்ள மின்விளக்குகள் பழுதடைந்து இரவு நேரங்களில் இருட்டாக உள்ளது. எனவே, பழுதடைந்த மின்விளக்குகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅஅ

இடம்: ஆஆஆஆ
நாள்: 15-10-2022.

**உறைமேல்முகவரி:**
**பெறுநர்**
உதவிப் பொறியாளர் அவர்கள் ,
மின்வாரிய அலுவலகம்,
ஆஆஆஆஆ.

**ஆ) சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக:-**

| | |
|---|---|
| கானடை | கான்அடை - காட்டைச் சேர். <br> கான் நடை - காட்டுக்கு நடத்தல். <br> கால் நடை - காலால் நடத்தல். |
| வருந்தாமரை | வரும் + தாமரை - வரும் தாமரைமலர் <br> வருந்தா + மரை - துன்புறாத மான். <br> வருந்து + ஆ + மரை - துன்புறும் பசுவும் மானும். |
| பிண்ணாக்கு | பிண் + நாக்கு – பிளவுபட்ட நாக்கு. <br> பிண்ணாக்கு எண்ணெய் எடுத்த பின் கிடைக்கும் பொருள். |
| பலகையொலி | பல + கை + ஒலி – பல கைகள் எழுப்பும் ஒலி <br> பலகை + ஒலி – மரப்பலகையின் ஒலி |

**படிப்போம் ; பயன்படுத்துவோம்!**

1. Happiness – மகிழ்ச்சி
2. Gratuity – பணிக்கொடை
3. Scepter - செங்கோல்
4. Truth - வாய்மை
5. Charity - ஈகை

**மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிடுக.**

| அறம் | பயன் |
|---|---|
| 1. புரளி பேசாதிருத்தல் | 1. தேவையற்ற சண்டைகள் நீங்கும் |
| 2. பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல் | 2. மன அமைதி பெறலாம். |
| 3. உண்மை பேசுதல் | 3. நம்வாழ்வை உயர்த்தும், அச்சமின்றி வாழலாம் |
| 4. உதவி செய்தல் | 4. மனமகிழ்ச்சி கிடைக்கும். |
| 5. அன்பாய் இருத்தல் | 5. அனைவரும் நண்பராகி விடுவர் |

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை இணையவழி விண்ணப்பப்பதிவு

முழுப்பெயர் :________________________________

பாலினம் :________________________________

கைபேசி எண் :________________________________

மின்னஞ்சல் முகவரி :________________________________

பிறந்த தேதி :________________________________

இரத்த வகை :________________________________

தந்தையின் பெயர் :________________________________

தாயாரின் பெயர் :________________________________

தொடர்பு முகவரி :________________________________

| கதவு எண் / தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

நிரந்தர முகவரி

| கதவு எண் / தெருவின் பெயர்/ கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

மாநிலம் : தமிழ்நாடு இனம் : இந்தியன்

ஆதார் எண் : xxxx xxxx xxxx

உங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றவும் :

கடவுச்சொல் : xxxxxxxxxxxx

கடவுச்சொல்லை உறுதிப்படுத்தவும் : xxxxxxxxxxxx

உறுப்பினர் கையொப்பம்

### பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப் படிவத்தை நிரப்புதல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ____________________ பணியினைத் தந்தால் எனது பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள

### நூலக உறுப்பினர் படிவம்

### __________________மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ____________________________________

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண் :

1 பெயர் ________________________
2 தந்தை பெயர் ________________________
3. பிறந்த நாள் ________________________
4.வயது ________________________
5. படிப்பு ________________________
6. தொலைபேசி எண் ________________________
7. முகவரி
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ________________________

நான்________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. __________, சந்தா தொகை ரூ. __________ ஆக மொத்தம் ரூ. ____________பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : தங்கள் உண்மையுள்ள,

நாள்:

திரு / திருமதி / செல்வி / செல்வன். அளிக்கிறேன். அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

அலுவலக முத்திரை

(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், (உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

**விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.**

**மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : நாள் : வகுப்பும் பிரிவும் :

1. மாணவ/மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12 சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்றுமொழியும் :

மாணவ / மாணவியின் கையொப்பம்

## மனப்பாடப் பகுதி (பாடல்கள்)

## அன்னை மொழியே

**அழகார்ந்த செந்தமிழே!**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

--- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

### காலக் கணிதம்

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

---- கண்ணதாசன்

### காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

---- அதிவீரராம பாண்டியர்

### திருக்குறள்

1. **எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.**
2. **பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.**
3. **பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.**

4. **அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்**
   **பெருமை முயற்சி தரும்.**
5. **முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
   **இன்மை புகுத்தி விடும்.**

---- திருவள்ளுவர்



## திருவிளையாடற் புராணம்

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

-----பரஞ்சோதி முனிவர்

## கம்பராமாயணம்

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.

வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோர் அழியாஅழ குடையான்.

---- கம்பர்

## திருக்குறள்

1. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
   தியற்கை அறிந்து செயல்.
2. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
   பொருளல்ல தில்லை பொருள்.
3. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
   றுண்டாகச் செய்வான் வினை.
4. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
   சுற்றமாச் சுற்றும் உலகு.
5. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
   இன்மையே இன்னா தது.

## சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும் ;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும் ;

---- இளங்கோவடிகள்

## முத்தொள்ளாயிரம்

அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு. ---தேம்பாவணி

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே ---- வீரமாமுனிவர்

**அலகிட்டு வாய்பாடு எழுதுதல். (வினா எண் (37)**

- புள்ளி வைத்த எழுத்தை அடுத்துக் கோடிட்டுப் பிரிக்க வேண்டும் . முயற்-சி
- நெடிலை அடுத்துக் கோடிட்டுப் பிரிக்க வேண்டும். எல்/லா/ரும். அற/னீ/னும்
- புள்ளி வைத்த எழுத்தும் நெடிலும் இல்லாவிட்டால் இரண்டு எழுத்துக்களுக்கு அடுத்துக் கோடிட்டுப் பிரிக்க வேண்டும். அரு/வினை
- பிரித்த பின் புள்ளி வைத்த எழுத்தைக் கணக்கில் கொள்ளாமல் ஒரு எழுத்து இருந்தால் நேர் என்றும் இரண்டு எழுத்துகள் இருந்தால் நிரை என்றும் குறிக்க வேண்டும்.

| ஓரசைச் சீர் | ஈரசைச் சீர் | மூவசைச் சீர் |
|---|---|---|
| நேர் -நாள் | நேர் நேர் - தேமா | நேர் நேர் நேர் - தேமாங்காய் |
| நிரை - மலர் | நிரை நேர் - புளிமா | நிரை நேர் நேர் - புளிமாங்காய் |
| நேர்பு - காசு | நிரை நிரை - கருவிளம் | நிரை நிரை நேர் - கருவிளங்காய் |
| நிரைபு - பிறப்பு | நேர் நிரை – கூவிளம் | நேர் நிரை நேர் - கூவிளங்காய் |

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| ஒழுக் /கம் | நிரை நேர் | புளிமா |
| விழுப்/பம் | நிரை நேர் | புளிமா |
| தர/லான் | நிரை நேர் | புளிமா |
| ஒழுக் /கம் | நிரை நேர் | புளிமா |
| உயி/ரினும் | நிரை நிரை | கருவிளம் |
| ஓம் /பப் | நேர் நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| பொரு/ளா/கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தில் /லைப் | நேர் நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/மம் | நிரை நேர் | புளிமா |
| சிதை/யா/மல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கண் /ணோ/ட | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| வல்/லார்க் | நேர் நேர் | தேமா |
| குரி/மை | நிரை நேர் | புளிமா |
| உடைத்/திவ் | நிரை நேர் | புளிமா |
| உல/கு | நிரைபு | பிறப்பு |



**2 மதிப்பெண் வினாக்கள் (வினாஎண்:16-21)**

**விடைக்கேற்ற வினா அமைக்க**

1) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?
உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவா?
2) தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றல் கொண்டவர் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.
தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றல் கொண்டவர் யார்?
தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றல் கொண்டவர் தமிழ்த்திரு இரா.இளங்குமரனாரா?
3) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.
நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று என்ன உணவு கொடுத்தனர்?
4) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.
சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றவர் யார்?
5) 1906-ஆம் ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக்கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
எந்த ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக்கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்?
6) தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலியவை திராவிட மொழிகளாகும்.
திராவிட மொழிகள் யாவை?
7) பூவின் தோற்ற நிலை அரும்பு ஆகும்.
பூவின் தோற்ற நிலை யாது?
8) ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனின் பெயர் பெப்பர்.
ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனின் பெயர் என்ன?
9) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து.
நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலை எது?
10) இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர் மார்ஷல் ஏ.நேசமணி ஆவார்.
இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர் யார்?

❖ **மாணவரின் தேவைக்கு ஏற்ப மேலும் கூடுதல் பயிற்சி வழங்கலாம்.**

**முயற்சி+ பயிற்சி= வெற்றி ...!!!**